**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.5084/ஆ5/2022, நாள். 28.12.2022**

பொருள் : Adolescent Champion Program – மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, வேலூர் – வேலூர் மாவட்டத்தில் வளரிளம் பருவத்தினரை மாற்றத்திற்கான முகவர்களாக வளர்த்தெடுத்தல் குறித்து பயிற்சி பெற்ற சிறுமி விஜயலட்சுமி மூலம் பள்ளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு அளிக்க அனுமதி (ம) பள்ளிகளின் விவரம் அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை : வேலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலரின் கடிதம் ந.க.எண்.584/மா.கு.பா.அ/2022, நாள்.29.11.2022.

#######

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க Adolescent Champion Program சென்னை மாநில கருவூல மையம் (State Resorce Centre, Chennai) மூலம் வளரிளம் பருவத்தினரை மாற்றத்திற்கான முகவர்களாக வளர்த்தெடுத்தல் குறித்து 5 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கரிகிரி பகுதியில் செயல்பட்டு வரும் தி ஹோப் ஹவுஸ் என்ற குழந்தைகள் இல்லத்தில் தங்கி கார்ணாம்பட்டு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 12–ஆம் வகுப்பு பயின்று வரும் சிறுமி விஜயலட்சுமி (வயது–16) பயிற்சி பெற்றுள்ளார். இம்மாணவி மூலம் வேலூர் மாவட்டத்தில் 5000 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே வளரிளம் பருவத்தினரை மாற்றத்திற்கான முகவர்களாக வளர்த்தெடுத்தல் குறித்து பயிற்சி பெற்ற சிறுமி விஜயலட்சுமி மூலம் பள்ளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு அளிக்க அனுமதியும், விழிப்புணர்வு அளிக்க நாள் மற்றும் பள்ளிகளின் விவரங்கள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்தில் 14 வயதிலிருந்து 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் வளரிளம் பருவத்தினைரை மாற்றத்திற்கான முகவர்களாக வளர்த்தெடுத்தல் Adolescent Champion Program குறித்து பயிற்சியில் பங்குபெற தகுதிவாய்ந்த மாணவ, மாணவியர்களை தேர்ந்தெடுத்து பெயர் பட்டியல் மற்றும் விழிப்புணர்வு அளிக்க நாள் குறிப்பிட்டு, இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித்–
தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – 1. மாவட்டக் கல்வி அலுவலர்,(இடைநிலை)வேலூர்.
2. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், வேலூர்.
(தகவலுக்காக அனுப்பப்படுகிறது.)

//ப.த.//